1977 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி கூட்டுறவு வங்கி பற்றிக் கூறும்போது மிக அதிகமான பகுதி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். அதில் உறுப்பினர்கள் அடங்கியிருக்கிறார்களா அல்லது கூட்டுறவு வங்கியின் தலைவரால் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிந்து அந்தத் தொகைகள் குறிப்பிட்ட இனங்களுக்குச் செலவழிக்கப் பட்டிருக்கிறதா, அல்லது வேறு வகையில் செலவழித்துவிட்டு கணக்குக் காட்டியிருக்கிறார்களா என்று தகவல் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளின் சீர்கேடுகளைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது, அரசு அதற்கென ஒரு குழுவை திரு. பாரதி தலைமையில் நியமித்து, எல்லா மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கும் அந்தக் குழு சென்று விசாரித்து, அறிக்கையை அரசிற்கு அளித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தந்த கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் தலைவர்கள் மீது சர்சார்ஜ் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் எந்த விளக்கமும் அரசு இப்போது சொல்லத் தயாராக இல்லை.

Bridge across Kusasthali river.

*40. THIRU EAKAMBARA REDDY.—Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether the proposal for construction of a submerisible bridge across 'Kusasthali' River near Pallipat, has been approved by the Government of India ;

(*b*) if so, the stage at which the matter stands ;

(*c*) whether necessary funds have been allotted for the work ; and

(*d*) when the work will be taken up for execution ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) மத்திய அரசின் ஒப்புதல் 1977 ஜுலை மாதம் தான் கிடைத்துள்ளது. டெண்டர் கோருதல் முதலிய பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடான ரூ. 27 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு உள்ளது.

(ஈ) டெண்டர் கோருதல் முதலிய முன்னேற்பாடுகள் முடிந்த பின் இத்திட்டத்திற்கான வேலைகள் நடப்பாண்டிலேயே தொடங்கப் படும்.

[1977 ஆகஸ்டு 9

THIRU EAKAMBARA REDDY.—Mr. Speaker, Sir, in view of the urgency and importance of the scheme, may I request the Hon. the Minister for Transport to take up this work this year itself by giving priority as a special case ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு நான் முன்னரே பதில் கூறியுள்ளேன். நடப்பாண்டிலேயே பூர்வாங்க வேலைகள் தொடங்கப்படும்.

கரும்புக்கான விலை.

*41. திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு உற்பத்தியாளர்கள், சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பும் கரும்புக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கரும்பு உற்பத்தியாளர்களுக்குத் தரவேண்டிய குறைந்தபட்ச விலையை ஆண்டுதோறும் மத்திய அரசு நிர்ணயித்து சட்ட ரீதியான அறிவிப்பை வெளியிடுகிறது. மத்திய அரசுக்கு நம்முடைய மாநில அரசு, டன் ஒன்றுக்கு ரூ. 125 நியாயமான விலை என்று முடிவு செய்யுமாறு பரிந்துரைத்தது. மத்திய அரசு சென்ற இரண்டு ஆண்டுகளாக இருந்ததைப் போலவே, டன் ஒன்றுக்கு ரூ. 85 என்று 1976-77 ஆம் ஆண்டிற்கும் குறைந்த பட்ச கரும்பு விலையை நிர்ணயம் செய்தது. இதன்படி 8·5 சர்க்கரை தரும் கரும்புக்கு டன்னுக்கு ரூ. 85 வீதத்திலும், அதற்கு மேற்பட்டு சர்க்கரை தரும் கரும்புக்கு கூடுதல் விலையும் ஆலைகள் தரவேண்டும் என்று முடிவு செய்துள்ளது.

திரு. சி. கோவிந்தராசன் ; ஒரு ஏக்கரில் கரும்பு பயிரிடுவதற்கு எல்லாச் செலவுகளையும் கூட்டிப் பார்த்தால் ரூ. 3,460 ஆகிறது. அந்த கரும்பு பயிரிடுவோர் குத்தகைக்கு எடுத்துச் செய்வதாக இருந்தால் ரூ. 700 யையும் சேர்த்து ரூ. 4,160 ஆகிறது. ஆனால், டன் ஒன்றுக்கு ரூ. 85 என்று சொன்னால் சராசரி 40 அல்லது 45 டன்கள் தான் ஒரு ஏக்கரில் விளைகிறது. கண்டுமுதலாகிறது. அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே கரும்பு நடமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் சர்க்கரை உற்பத்தி இந்த மாநிலத்தில் குறையும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்தும் மத்திய அரசு குறைந்தபட்சம் ரூ. 85 என்று சொல்லியிருப்பதால் இதனால் சர்க்கரை உற்பத்தி தடைபடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே பலமான முறையில் நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் கோரிக்கையை ஆதரித்து மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?